இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கடைசி மகனான ரோஹித ராஜபக்ஷவின் திருமணம் இன்று தங்காலை, வீரகெட்டியாவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் பரம்பரை இல்லமான கார்ல்டன் ஹவுஸில் நடைபெறுகின்றது.

பௌத்த முறையிலான திருமண நிகழ்வு காலை 9 பக்கம் 02 »

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 11 | வியாழக்கிழமை 24.01.2019 | கதிர் 80

# ஐ.நா. அமர்வில் இலங்கையை இறுக்க வேண்டும் சர்வதேசம்

## பிரிட்டனிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு



கொழும்பு, ஜனவரி 24

இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. எனவே, அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதேவேளை, இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பக்கம் 11 »

## மைத்திரி கொலைச் சதி; நாமலிடம் விசாரணை

கொழும்பு, ஜன. 24

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம், குற்றப் பக்கம் 11 »

## விக்கி எமக்கு சவால் அல்லர்!

### ஓர் ஆசனம்கூட அவருக்குக் கிடைக்காது என்கிறார் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன்

கொழும்பு, ஜன. 24

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்து தேர்தலில் பக்கம் 02 »

## ஜனாதிபதி மைத்திரி சிங்கப்பூர் பயணம்

கொழும்பு, ஜன. 24

ஐ.நா. ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் நிறுவனங்களின் தலை பக்கம் 11 »

## கே.கே.எஸ். - கொழும்பு சேவையை ஜன. 30 ஆரம்பிக்கிறது உத்தரதேவி

கொழும்பு, ஜன. 24

உத்தரதேவி ரயிலின் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் பக்கம் 11 »

## மாகாண சபைத் தேர்தலை நடத்த மேற்குலகின் அழுத்தம் அவசியம்

### கோருகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஜன. 24

காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை பக்கம் 11 »

## இரணைமடுக்குள நீரைப் பயன்படுத்தும் முதல் உரிமை கிளிநொச்சி மக்களுக்கே!

### வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 24

கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரித்தான இரணைமடுக் குளத்தின் நீரை அவர்களே பயன்படுத்தும் முதல் உரிமைஉடையவர்கள்என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். பக்கம் 02 »

## ஐ.நா. தீர்மானம் ஊடாகப் புதிய அரசமைப்பு நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்!



### மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 24

ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானங்கள் ஊடாகவோ அல்லது அழுத்தங்கள் மூலமாகவோ இலங்கைக்குள் புதிய அரசமைப்பைத் திணிக்க ஒரு பக்கம் 11 »

## சர்ச்சைக்குரிய நாயாறு புத்தர் சிலை பொலிஸ் உதவியுடன் நேற்றுத் திறப்பு

முல்லைத்தீவு, ஜன. 24

நாயாறு நீராவியடிப்பிள்ளையார் கோவில் வளாகப் புத்தர் சிலைபொலிஸார்மற்றும்தொல்லியல் திணைக்களத்தினரின் உதவியுடன் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நாயாறு பக்கம் 02 »



## சபையில் குழப்பங்களுக்கு சுமந்திரனே மூலகாரணம்

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

அரசியல் நெருக்கடியின்போது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முரண்பாடுகளின் மூல காரணமாகவும், பக்கம் 11 »

## அரசு-கூட்டமைப்பு இணைவுக்கு அரசியல் விபத்துத்தான் காரணம்

### கூறுகின்றார் அமைச்சர் மனோ



மன்னார், ஜன. 24

அரசுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகின்றமைக்கு, நாட்டில் பக்கம் 11 »

## பிரிகேடியர் மீதான பிடியாணை வியன்னா ஒப்பந்தத்துக்கு முரண்

### இலங்கை அரசு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 24

லண்டனில் இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக வெஸ்ட் பக்கம் 11 »

## பிரிட்டன் உயரதிகாரி ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 24

பிரிட்டன் அரசின் தெற்காசிய விவகாரங்களுக்கான தலைமை அதிகாரியும் இந்திய விவகாரங்களுக் பக்கம் 02 »

## மலையகமெங்கிலும் நேற்று போராட்டம்!



கொழும்பு, ஜன. 24

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை பக்கம் 11 »

## புதிய அரசமைப்பு நிறைவேறாவிடின் எமக்கெதிரான சக்திகள் தலைதூக்கும்

### எச்சரிக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 24

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும். அவர்களுக்குப் பிரச்சினை இல்லையென நினைக்காதீர்கள். இது முக்கியமா என்று கேட்பதும் பக்கம் 02 »

காலைக்கதிர் Kālaikkathir



## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிழை. புதிய அரசமைப்பை எங்களால் செய்ய முடியாமல் போனால் எமக்கெதிரான சக்திகள் தலைதூக்கும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

'ஹிரு' தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது–

விடுதலைப்புலிகளை தோல்வியடையச் செய்கின்றோம் என்ற பெயரில் மஹிந்த அரசால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டனர். தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை வெறுப்பதற்கு அதுவும் காரணம்.

விடுதலைப்புலிகள் 'பயங்கரவாதிகள்' என்றால் அவர்களை அழிக்க அரசு நடந்துகொண்ட முறையும் ஒருவித பயங்கரவாதம்தான்.

புதிய அரசமைப்பு வராது. நீங்கள் வீணாக நம்பிக் கொண்டிருக்கிறீர்கள் என்று எங்கள் தரப்பில் என் மீது விமர்சனங்கள் செய்கின்றனர். ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வந்தாக வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

ஒற்றையாட்சி என்றால் ஓர் இடத்தில் ஆட்சி நிர்வாகம் இருக்கும். அப்படியானால் எப்படி நீங்கள் அதிகாரத்தைப் பகிர்வீர்கள்?

நாட்டைப்பிரிக்காமல் ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிருங்கள். அதையே கூறுகின்றோம். ஒருமித்த நாடு அல்லது ஒன்றுபட்ட நாடு என்று கூறலாம் என்று நான் யோசனை முன்மொழிந்தேன். அதில் ஒருமித்த நாடு என்று குறிப்பிடுவது நல்லதெனத் தீர்மானித்தார்கள்.

தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் இது புரியாமல் உள்ளது. சமஷ்டி இல்லையென ரெலோ என்ற எங்களின் பங்காளிக் கட்சி கூட எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

நாட்டைப் பிரிக்கக் கூடாது. அந்தச் சிந்தனை இருக்கக் கூடாதென நான் மக்களிடம் சொல்கிறேன். இதை சில வருடங்களுக்கு முன்னர் நான் யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தால் பின்னர் எப்படி திரும்பி வந்திருப்பேன்? மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும்.

அரசமைப்பு என்பது சமூக ஒப்பந்தம். அதனால்தான் அனைவரினதும் இணக்கம் இதற்குத் தேவையெனக் கருதப்படுகிறது.

இவ்வளவு பிரச்சினைகள் உயிரிழப்புக்கள், சேதங்களுக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மக்கள் இன்னமும் ஏன் சமஷ்டி கட்சிக்கு (இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு) ஆதரவளிக்கின்றார்கள்? அவர்களுக்கு அரசியல் தீர்வு தேவை. அவர்களுக்கு பிரச்சினை இல்லையென நினைக்காதீர்கள். இது முக்கியமா என்று கேட்பதும் பிழை. புதிய அரசமைப்பை எங்களால் செய்ய முடியாமல் போனால் எமக்கெதிரான சக்திகள் தலைதூக்கும் – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சர்ச்சைக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த 14 ஆம் திகதி அன்று அப்பகுதித் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளுக்காக சென்றபோது வளை அப்பகுதியில் குடியிருக்கும் பௌத்த துறவிக்கும் மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது.

இந்த முறுகல் நிலை தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வருமாறு முரண்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் அவசர நிலையொன்றை உணர்ந்து, ஆலய நிர்வாகத்தினர் மற்றும் தமிழர் மரபுரிமைப்பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான வி. நவநீதன் ஆகியோர் நகர்த்தல் பத்திரம் ஒன்றின் மூலம் அது தொடர்பன வழக்கை நேற்று முன்தினம் விசாரணைக்குக் கோரி விசாரணை நடந்தது.

இந்த வழக்கு விசாரணைகளில், அந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்பது, தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராம மக்களின் சார்பில் ஆஜரானவர்களால் வெளிப்படுத்தப் பட்டது.

பௌத்த துறவியையும் இன்று வியாழக்கிழமை மன்றில் ஆஜராக வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டிருந்து.

இந்நிலையிலேயே நேற்றுப் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரின் ஆதரவுடன் சட்டவிரோதமான வகையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை திறக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இந்தத் தகவலறிந்து அந்த இடத்திற்கு விரைந்த வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், நிலைமைகளை நேரில் கண்காணிக்கும்போது அங்கிருந்த பௌத்த துறவிகள் மற்றும் தென்னிலங்கையைல் இருந்து வருகை தந்தவர்கள் சிலரும் அச்சுறுத்தும் வகையில் செயறப்பட்டனர்.

அங்கு செய்தி சேகரிப்பிற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்தவர்களாலும், பௌத்த துறவிகள் சிலராலும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தப்பட்டனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

# புதிய அரசமைப்பு நிறைவேறாது

## அடித்துக் கூறுகிறார் குமார வெல்கம

கொழும்பு, ஜன. 24

நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படவுள்ள புதிய அரசமைப்பு யோசனை ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைக் கூறினார்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி செய்கின்ற செயற்பாடுகளின் பின்னால் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# ரஷ்ய பிரதி அமைச்சருடன் இலங்கைத் தூதுவர் சந்திப்பு




மொஸ்கோ, ஜன. 24

ரஷ்ய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் ஜெனரல் அலெக்சான்டர் போமின், ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலகவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இருதரப்பு இராணுவ மற்றும் இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, மேலதிக முன்னேற்றங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது, கலந்துரையாடப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு ரஷ்யா ஏற்கனவே விருப்பம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரணைமடுக்குள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநெச்சி விவசியிகள் சார்பில் அவர்களின் பிரதிநிதிகள் கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்துக்கு நேற்றுக் காலை சென்றனர். அவர்கள் வடக்கு ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இரணைமடுக் குளத்திலிருந்து வீணாகச் சமுத்திரத்துக்குச் செல்லும் 60 வீதமான நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவருவதற்கான சிறப்பு செயற்திட்ட முன்மொழிவைக் கூடியவிரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அதிகாரிகளுக்குக் கடந்த வாரம் பணித்திருந்தார். ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கிளிநொச்சி விவசாயிகள் நேற்று வடக்கு மாகாண சபை அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போதே ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இரணைமடுக் குளத்தில் உள்ள நீர் கிளிநொச்சி மக்களுக்கு உரியதாகும். அந்தக் குளத்தின் நீரை அந்த மக்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இருப்பினும் யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கும் தண்ணீர் தேவை உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தண்ணீருக்கு உரித்துடையவர்கள் அந்தத் தண்ணீரை வீண் விரையமாக்காமல் பயன்படுத்தி விட்டு, வேறு மாவட்டங்களில் தண்ணீர் தேவை உடையவர்களுக்குப் பகிர்ந்து வழங்க வேண்டும் என்பதே சர்வதேச நீதியாகும்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் எங்கு நீர் உள்ளது. அதனை எவ்வாறு சேமித்து மக்களின் தேவைகளுக்காகப் பயன்டுத்தவேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இந்தக் குழுவில் விவசாய சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 3 பெண்கள் உட்பட 5 பேர் மாவட்டங்களின் அடிப்படையில் உள்ளடக்கப்படுவார்கள்.

இந்த வகையில் கிளிநொச்சி விவசாயிகளுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இவ்வருடன் சிறுபோகச் செய்கைக்காக இரணைமடுக் குளத்தில் உள்ள நீரை விவசாயிகளுக்குப் பகிர்ந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்து மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக வடக்கில் வீண் விரையமாக்கப்பட்டு கடலுடன் கலக்கும் நன்னீரை எவ்வாறு சேமித்து மக்களுக்கு வழங்க முடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் நீர் தேவைகளை முழுமையாக நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கிளிநொச்சியில் உள்ள விவசாயிகள் தமது பிரச்சினைகளோ அல்லது நீர் முகாமைத்துவம் தொடர்பான கருத்துக்களை அந்தக் குழுவிடம் முன்வைக்க முடியும்.

வடக்கு மக்களின் தேவைகளை முழுமையாக தீர்த்துக்கொள்வதற்கான நீர் வளம் இங்கு உண்டு. அந்த நீரை பராமரித்து மக்களுக்கு வழங்குவதிலேயே பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு மாவட்டத்தில் தண்ணீர் அதிகமாக உள்ளது, மற்றுமொரு மாவட்டத்தில் தண்ணீர் குறைவாக உள்ளது. இதனல்தான் நீர் பிரச்சினை மெலேழுகின்றது.

இதனால் பேச்சுக்கள் ஊடாக எதிர்வரும் 20 ஆண்டுகளுக்கு வடக்குமாகாணத்தின் நீர்முகாமைத்துப்படுத்தப்படும் திட்டம் ஒன்று முன்மொழியப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் தண்ணீர் பிரச்சினை தொடர்பான பிரகடனம் உருவாக்கப்பட வேண்டும்–என்றார். (ஐ-07)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட்டால் அவருக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்காது. அவர் எங்களுக்கு ஒரு சவால் அல்ல.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

'ஹிரு' தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபை முறையாக இயங்கவில்லை. அதனை நான் ஏற்கிறேன். இனி அதனை நாங்கள் சரியாகக் கையாள்வோம் எனவும் சுமந்திரன் எம்.பி. மேலும் கூறியுள்ளார். (ஐ)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான ஒருங்கிணைப்பாளருமான போர்கஸ் அல்ட் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் கைதடியில் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணி முதல் நடைபெறும். மதிய விருந்துடன் வரவேற்புபசாரம் இடம்பெறுகின் றது.

மூத்த இருவர்களான நாமலும், யோசிதவும் இருக்கத்தக்கதாக திருமணப் பந்தத்தில் முந்திக் கொண்டு இணைகின்றார் தம்பி ரோஹித.

வீட்டில் சுருக்கமாக நடக்கும் திருணம் என்பதால் அழைப்புகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் முக்கிய பிரமுகர்கள் பலருக்கும் கூட அழைப்பிதழ்கள் இல்லை எனத் தெரிகின்றது. அதனால் பல அரசியல்வாதிகள், நண்பர்கள், நெருக்கமான ஊடகவியலாளர்களுடன் தொடர்பு கொண்டு அழைப்பு வைக்கப்படாமைக்கு முற்கூட்டியே வருத்தம் தெரிவித்திருக்கின்றார் மஹிந்தர்.

இதேசமயம், நேற்று கொழும்பில் மஹிந்த ராஜபக்ஷவின் காலம் சென்ற சகோதரி ஒருவரின் மகனின் திருமணம் நடைபெற்றது.

இரண்டு திருமணங்களுக்குமான அழைப்பிதழைப் பெற்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இரண்டுக்கும் பொதுவாக நேற்றே மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்குச் சென்று வாழ்த்துக் கூறி வேலையை முடித்துக் கொண்டார். நேற்றே அவர் சிங்கப்பூர் புறப்பட விருந்தார். அதனால் இன்று நடைபெறும் மஹிந்த ராஜபக்ஷவின் இல்ல நிகழ்வில் தாம் பங்குபற்ற முடியவில்லை என்பதை மஹிந்தருக்கு நேரில் தெரிவித்தாராம் மைத்திரி.

தற்போது தனக்குக் கிடைத்திருக்கும் ஜனாதிபதி பதவியின் சிறப்புரிமையை வைத்துக் கொண்டு இயன்றவரை உலகத்தைச் சுற்றியடிக்கும் மும்முரத்தில் இருக்கின்றார் போலும் மைத்திரி. மாதத்துக்கு மூன்று, நான்கு தடவைகள் வெளிநாடு பறக்கின்றார். அதனால்தான், 'ஸ்ரீலங்கன்' விமான சேவையின் சீத்துவம் குறித்து நேரில் கண்டறிந்து – பட்டறிந்து – விமானப் பயணத்தின் போது வழங்கப்படும் கஜு கூடத் தரமானதில்லை என்பது வரை நுணுக்கமான விடயங்களை – விமர்சனங்களை – முன் வைக்கின்றார் போலும்.

மொத்தத்தில் 'உலகம் சுற்றும் வாலிபன்' ஆகிவிட்டார் இலங்கையின் அதி உத்தமர்!

இன்றைய திருமணத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அழைப்பு அனுப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. எனினும் கொழும்புக்கு வெளியே வீரகெட்டியாவில் திருமணம் நடைபெறுவதால் அவ்வளவு தூரம் தம்மால் பயணம் செய்ய முடியாது என்று கூறி திருமணத்தில் பங்குகொள்ளாமல் தவிர்க்க அவர் முடிவு செய்து விட்டார் எனவும் அறிய வந்தது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருமணத்தில் நேரில் பங்குபற்றுகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ – ஷிராந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ தம்பதிகளின் புதல்வன் ரோஹிதவுக்கும் –

ஜெரோம் ஜெயரட்ண – பேற்ட்ரேடி லிவேரா தம்பதியரின் புதல்வி டட்டியானாவுக்கும் –

இடையில் இன்று நடைபெறும் திருமணம் கொழும்புக்கு வெளியே சுருக்கமாக நடைபெற்றாலும், தென்னிலங்கை அரசியலின் பார்வை அதன் மீது அதிகம் விழுந்திருக்கின்றது என்பது மட்டும் நிஜம்.

-மின்னல்-

# வடக்கு மக்களின் பிரச்சினைகளை உடன் தீர்க்க ஆளுநர் நடவடிக்கை

## நேற்று கைதடியில் மக்களைச் சந்தித்தார்



யாழ்ப்பாணம், ஜன.

வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவு செய்ய வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் அனைத்துத் துறை அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் இணைந்து மக்கள் பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டறிந்த அவர், உடனடித் தீர்வுகளை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் வாரம் தோறும் புதன்கிழமை மக்கள் சந்திப்பை நடத்தி வந்தார். மாகாண சபையின் ஆட்சி கடந்த ஒக்ரோபர் இறுதியில் முடிவுக்கு வந்த பின்னர் அந்தச் சந்திப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் மக்கள் சந்திப்பை நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் ஒவ்வொரு புதன்கிழமையும் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனால் மக்கள் தெரிவிக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் பிரச்சினைகளுடன் வரும் மக்களைப் பேச வைத்து அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமையும் ஏராளமான மக்கள் ஆளுநரைச் சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

இதனால் பிரச்சினைகளுடன் வரும் மக்களில் பெரும்பாலானோர் தமது பிரச்சினைக்கான தீர்வை அல்லதுதீர்வுக்கான இலகுவழிகளை காணக்கூடியதாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்




கிளிநொச்சி, ஜன. 24

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் நேற்று முற்பகல் பத்து மணிக்கு மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா கூலி கேட்டுத் தொடர்ச்சியாகப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இங்கு கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்,

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளுக்காகப் போராடியபோது மலையக மக்கள் அந்தப் போராட்டத்திற்கு தங்களின் தார்மீக ஆதரவை வழங்கியிருந்தார்கள். அதற்காக உயிர்த்தியாகங்கள் கூடச் செய்திருந்தார்கள். அதுமாத்திரமன்றி அவ்வப்போது எங்களின் துயரங்களிலும் பங்குகொண்டனர்.

எனவே தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு நாம் எமது தார்மீக ஆதரவை வழங்கி நிற்கின்றோம். அவர்களது ஆயிரம் ரூபா சம்பள உயர்வை இந்த நல்லாட்சி அரசு வழங்கவேண்டும். தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் கூட போதுமானது அல்ல. ஆனால் அந்த ஆயிரம் ரூபாவை கூட இந்த அரசு வழங்காது முதலாளிமார்களின் நலன்களோடு ஒட்டிச் செல்கிறது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்புச் செய்கின்ற தோட்டத் தொழிலாளர்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தையே கேட்கின்றனர். அதனை அவர்களுக்கு வழங்குவதனால் எவருக்கும் எந்த நட்டமும் ஏற்படப் போவதில்லை-என்றார். (ஐ)

# ராஜபக்ஷவினரை தண்டிக்கவேண்டும்

## கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 24

மோசடியில் ஈடுபட்ட கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை வழங்குவதன் மூலம் அரசு முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி குறிப்பிட்டார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணை ஆணைக்குழுக்கள் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய நபர்கள் சிலர் குற்றவாளிகள் எனக் கடந்த கால ஆணைக்குழு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.எனவே இந்த அரசு அவர்களைத் தண்டித்து முன்னுதாரணமாகச் செயற்பட்டு காட்டவேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களது ஆதரவு இந்த அரசுக்குக் கிடைக்கும். அத்துடன், விசாரணை ஆணைக்குழு அறிக்கைகள் நேரடியாக நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இதன்போது அது எதிர்காலத்தில் அமைக்கப்படும் ஆணைக்குழுக்களுக்குப் பொருந்துமா அல்லது இதுவரை நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு மட்டுமே பொருந்துமா என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (ஐ)

# விஜயகாந்துக்கு பிணை கிடைத்தது

## மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நடப்பதால் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் முற்போக்குத் தமிழ் தேசியக் கட்சியின் செயலாளருமான சுதர்சிங் விஜயகாந்தை மேன்முறையீட்டின் போதான பிணையில் செல்ல அனுமதி வழங்கி யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை வழங்கியது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் சுதர்சிங் விஜயகாந்துக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டு மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணையில் உள்ள நிலையிலேயே இந்தக் கட்டளை நேற்று வழங்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு ஜுலை மாதம் வங்கியொன்றில் அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் நண்பர்களுடன் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலகரின் திருட்டுப் போன நகைகள் அவர்களிடம் காணப்பட்டன. அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேரும் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களைமுன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



சந்தேகநபர்கள் நால்வர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 3 குற்றவாளிகளுக்கான தண்டனைத் தீர்ப்பை 2018 மார்ச் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் வழங்கினார். எனினும் ஒரு குற்றவாளி தலைமறைவாகியுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

முற்போக்குதமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்கவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைச் சமர்ப்பித்தார்.

தண்டனைக் கைதி சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதால் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2018ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி விண்ணப்பம் செய்தார். அந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் நிராகரித்தார்.

இந்த நிலையில் விஜயகாந்த் சார்பில் நீதிவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட பிணை விண்ணப்பம் மீதான கட்டளையைச் சீராய்வு செய்யும் மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன. சீராய்வு மனு மீதான கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் நேற்று வழங்கினார்.

தண்டனைக் கைதியின் மேன்முறையீட்டு மனு மீதான பிணை விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை நிராகரித்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளையிட்டது. மேன்முறையீட்டாளரை நீதிவான் நீதிமன்றின் ஆரம்ப பிணை முறியில் விடுவிக்குமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இல்லாத மேடையில் ஏன் இந்த நடிப்பு!

*“புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையிலும், நிபுணர் குழுவின் அறிக்கையிலும் ‘ஏக்கிய இராஜ்ஜிய’ / ‘ஒருமித்த நாடு’ என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அது இறுதி வரைவிலும் இருக்க வேண்டும்.*

*“சமஷ்டிப் பண்புகளுடன் மாகாணங்களுக்கு நேர்மையான அதிகாரப் பகிர்வு இறுதி வரையில் காணப்பட வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் அதனை ஆதரிப்பர்.”*

– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவரது இந்தக் கூற்றை இந்தக் கட்டத்தில் கேட்கும் போது ஒரு சினிமாப் பாடல் வரிதான் நினைவுக்கு வருகின்றது.

*“இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தில் எல்லோரும் நடிக்கின்றோம்.”* – என்பதுதான் அந்தப் பாடல் வரி.

மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிப் பீடத்தை அகற்றவும், மாற்றுத் தலைவர் ஒருவரை நிவைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டு வரவும், தென்னிலங்கைக் கட்சிகளை ஒன்றிணைத்து நல்லாட்சி அரசை ஏற்படுத்தவும் 2014 இறுதி முதல் தீவிரமாக உழைத்த தலைவர்களுள் சம்பந்தனும் ஒருவர். அவருக்குப் பின்னால் இம்முயற்சிகளில் தமிழினமும் அணி வகுத்து நின்றது என்பதும் நிஜம்.

இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியானதும், நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடியதுமான தீர்வு ஒன்றை எட்டலாம் என சம்பந்தன் முழுமையாக நம்பினார். அந்த அடிப்படையில் நம்பிக்கையுடன் அந்த முயற்சியில் ஈடுபட்டார். சில, பல இணக்கமான ஏற்பாடுகளுக்கும் உடன்பாடுகளுக்கும் வந்தார்.

தாம் நம்பிக்கையுடன் ஈடுபட்டமை மாத்திரமல்லாமல், தென்னிலங்கைக்கும் தமிழர் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் அதிக பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டார்.

1977 இல் தனித் தமிழீழக் கோரிக்கை முன்வைத்தே தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை வேட்பாளராகக் களமிறங்கி, தனது அரசியல் பிரவேசத்தை முன்னெடுத்தவர் சம்பந்தன். அது முதல் தமிழீழத்துக்கும் பிரிவினைக்குமாக ஒற்றைக் காலில் நின்றவர்.

ஆனால் இப்போது அதையெல்லாம் தூக்கிக் கடாசி விட்டு, நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய – யதார்த்தபூர்வமான – ஒரு தீர்வைத் தனது காலத்திலேனும் எட்டிவிட வேண்டும் என்பதற்காகவும், அது விடயத்தில் தென்னிலங்கைப் பெரும்பான்மை இனத்தவருக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் மூச்சுக்கு மூச்சு ‘ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு’ என்பதை வலியுறுத்துகின்றார் அவர்.

ஒவ்வொரு தடவையும் வலிந்து வலிந்து ‘ஒன்றுபட்ட, பிரிக்கமுடியாத இலங்கைக்குள் தீர்வு’ என்பதை பகிரங்கமாக அவர் வெளிப்படுத்தும் போதெல்லாம் –

‘பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கும் ஒற்றையாட்சிக்குள் மட்டுமே தீர்வு’ என்று எதிர்வினை காட்டுகின்றது தென்னிலங்கை.

தென்னிலங்கைத் தரப்புகளுடன் நீதியான தீர்வு ஒன்றை எட்டுவதற்காக அத்தரப்புகளை முழுமையாக நம்பியும், அவர்களுக்கு முழு நம்பிக்கையையும் ஏற்படுத்தும் விதத்திலும் அவர் நடந்து கொண்டார்.

‘நம்ப நட; நம்பி நடவாதே!’ என்ற கோட்பாட்டையே தாங்கள் பின்பற்றுகின்றனர் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வந்தாலும் அவர்கள் ‘நம்பியும் நடந்தனர்; நம்பவும் நடந்தனர்’ என்பதே உண்மை.

அதனால்தான் ‘2016 இல் தீர்வு’, ’2017 இல் தீர்வு’, ’2018 இற்குள் தீர்வு’ என்றெல்லாம் சம்பந்தரின் அறிவிப்புகள், பகிரங்க உரைகள் அமைந்தன.

ஆனால், கடைசியில் தென்னிலங்கை பௌத்த, சிங்கள பேரினவாதம் தனது கோர இனவாத முகத்தைக் காட்டிவிட்டது. நம்பிக்கை அளித்து, ஏமாற்றுவதே தனது நிரந்தரத் தந்திரோபாய மார்க்கம் என்பதை திரும்பவும் நிரூபித்து விட்டது. தேர்தல் அரசியல் என்று வரும்போது இனவாதப் பண்பியல்புகளுக்கு சார்பாக நடந்து கொள்வதைத் தவிர தங்களிடம் வேறு பாதைகள் இல்லை என்பதை சம்பந்தன் நம்பிக்கை வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் உறுதிப்படுத்தி விட்டனர்.

அதனால், சம்பந்தனின் பேச்சுச் சுருதி இப்போது மாறி விட்டது. தீர்வின் மீதான நம்பிக்கையில் அவரின் சுரத்தும் குறைந்து விட்டது.

*“சமஷ்டிப் பண்புகளுடன் மாகாணங்களுக்கு நேர்மையான அதிகாரப் பகிர்வு இறுதி வரையில் காணப்பட வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் அதனை ஆதரிப்பர்.”* என்று இப்போது சம்பந்தன் கூறுகின்றார்.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அம்சங்களையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு முயற்சியே இனி முன்நகராது என்ற சூழல் ஏற்பட்டுள்ள நிலையில்

இனியும், அண்மைக் காலத்தில், ஒரு தீர்வுத் திட்டம் வரப் போவது போலவும், அதில் சமஷ்டிப் பண்புகளுடன் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் மட்டுமே அதனை ஏற்றுக் கொள்ள முடியும் எனவும் பேசுவது அர்த்தமேயற்றது.

அப்படிக் கூறிக் கொண்டிருப்பது, ‘இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தில் நடிப்பதற்கு’ ஒப்பனதாகும்.

இனப் பிரச்சிரனைக்கு நியாயமான தீர்வு காணும் நல்நோக்கத்துடன், தமிழர் தரப்பின் தலைவர்கள் தாம் என்ற முறையில் தமிழர் சார்பில் அவர்களின் பிரதான கோரிக்கைகளில் – வேணவாக்களில் – அபிலாகைளில் – பல படிக்கட்டுகள் கிழிறங்கி வந்து உச்ச விட்டுக் கொடுப்புக்குத் தயார் என்று வெளிப்படுத்தி, அந்த விட்டுக் கொடுப்புகளின் விவரங்களையும் சம்பந்தனின் தலைமை பகிரங்கமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இப்போது அமைதித் தீர்வுக்கான வாய்ப்புகள் பெரும்பாலும் அடங்கி விட்டன. கடைசியாகப் பெறுபேறு என்னவென்று பார்த்தால், தீர்வு முயற்சியில் தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்துத் தமிழர் தரப்பு பல படி நிலைகள் இறங்கி நிற்பதுதான் மிச்சம். தமிழர் தரப்பின் பேரம் பேசும் மட்டத்தைக் கீழிறக்கியது மட்டுமே 2015 இல் ஆரம்பிக்கப்பட்டு, இந்த ஆண்டுடன் பயனின்றிக் காலாவதியாகிப் போகப் போகும் தற்போதைய அமைதி முயற்சிகளின் பெறுபேறாகும்.

### தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை

# சிங்கள மக்களுக்கு தாரைவார்ப்பதற்கு விக்கி முயற்சிக்கிறார் எனக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

வடமாகாண முன்னாள் முதலமைச்சா சீ.வி.விக்னேஸ்வரன் வடகிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு சில ஆலோசனைகளை வழங்குவதாக கூறி தமிழ் மக்களுடைய நிலங்களை சிங்கள மக்களுக்கு தாரைவார்க்கும் சதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசைப்படுகிறார்.

அவருடைய ஆசை நிறைவேறினால் வடகிழக்கில் மட்டுமல்ல இலங்கையிலேயே தமிழர்கள் 3ஆம் தர பிரஜைகளாக மாற் றப்படுவார்கள்.

இவ்வாறு அறம் செய் அறக் கட்டளையின் இலங்கை கிளை ஆலோசகா வேலாயுதபிள்ளை பஞ்சலிங்கம் கூறியுள்ளார்.

வடகிழக்கு மாகாணங்களின் இணைப்பு குறித்து முன்னாள் வடமாகாண முதலமைச்சா சீ.வி. விக்னேஸ்வரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ள கருத்து தொடர்பாக, எதிர்ப்பு தெரிவித்து யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்து கருத்து கூறும்போதே வேலாயுத பிள்ளை பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவா கூறுகையில் –

முன்னாள் முதலமைச்சா வடகிழக்குமாகாணங்களின் இணைப்புக்கான தனது ஆலோசனை என்றபெயரில் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அந்த ஆலோச னைகளாவன : அம்பாறை தேர்தல் தொகுதியை ஊவா மாகாணத்துடன் இணைத்தல், திருகோணமலை கோமரன் கடவை பிரதேசத்தை வடமத்திய மாகாணத்துடன் இணைப்பது, புத்தளம் பிரதேசத்தை மன்னா மாவட்டத்துடன் இணைத்தல் ஆகியனவே அவருடைய யோசனை.

இந்த யோசனையை நடைமுறைப்படுத்தவேண்டும். என அவர் நினைக்கிறார். அவருடைய இந்த யோசனை நடைமுறைக்கு வந்தால் வடகிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்கள் தமது இருப்பை இழப்பதுடன் 3 ஆம் தர பிரஜைகளாக மாற்றப்படும் அபாயம் உள்ளது. இது முன்னாள் முதலமைச்சரின் சதித் திட்டமாகும். தமிழர்களின் அடிச்சுவடு தெரியாமல் அழிக்கும் நோக்கிலேயே இந்த கருத்தை அவர் கூறியுள்ளார்.

உண்மையில் திருகோணமலை கோமரன்கடவை தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலம்,

அங்கு பிரதேசசபை தவிசாளராக இருந்தவர் நடராஜா என்ற தமிழர். அவர் மீது சிங்கள காடையாகளால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதுடன், பின்னாளில் அங்கிருந்து தமிழ் மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் கூறிய எல்லா யோசனைகளிலும் தமிழ் மக்களுடைய பூர்வீக வாழ் நிலங்கள் அபகரிக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் 1948ம் ஆண்டுக்குமுன்னர் இருந்தவடகிழக்கை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக இத்தனை இழப்புக்கள், உயிர் அழிவுகளுக்கு பின்னரும் தமிழ் மக்கள் நிலத்தை கேட்டு போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறான நிலையில் தமிழ் மீது பற்றுள்ளவர்கள் இவ்வாறான ஒரு கருத்தை கூறியிருக்க மாட்டார்கள். எனவே முதலமைச்சருடைய கட்சியில் உள்ள ஒவ்வொருவரும் அதிலிருந்து வெளியே வாருங்கள். இல்லையேல் எல்லோரும் துரோகி பட்டத்தைச் சுமப்பீர்கள் – எனக் கூறியுள்ளனர்.(ஏ)

### யாழ் நகரப் பகுதியில் டெங்குத் தாக்கம்;

## கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம் சட்ட நடவடிக்கை முன்னுரிமை

யாழ். மாநகர பகுதிக்குட்பட்ட நாவாந்துறை, நல்லூர், அரியாலை, வண்ணார்பண்ணை போன்ற இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினால் விசேட செயற்றிட்டம் நேற்று புதன்கிழமையும், இன்று வியாழக்கிழமையும் நடைமுறைப்படுத்தபட்டுள்ளது.

அன்றைய தினங்களில் தங்களின் சுற்றாடலில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் உள்ளனவா எனப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் தங்களின் சுற்றாடலில் இனங்காணப்படின் அதிகரித்துச் செல்லும் டெங்கு நோயில் இருந்து மக்களை காப்பாற்றும் நோக்கம் கருதி எவ்வித முன்னறிவித்தலுமின்றி சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

எனவே அதிகரித்துச் செல்லும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்வோம்.

1. அதிகமான இடங்களில் குளிர்சாதனப் பெட்டியின் பின்புறத்தில் காணப்படும் நீர் தேங்கக் கூடிய பகுதியும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

2. தண்ணீர் சேமித்து வைக்கப்படும் தொட்டியும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

3. வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் தேவையற்ற பொருள்களும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

இது குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ. தேவநேசன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

(இ)

## நாவற்குழி மகாவித்தியாலயத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு.

(எஸ்.நிதஷர்ன்)

ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மதுவிலிருந்து விடுதலை பெற்ற நாடு எனும் தொனிப்பொருளிலான போதைப்பொருள் விழிப்புணர்வு நடவடிக்கையின் தொடர்ச்சியாக சாவகச்சேரி பொலிஸாரால் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் பவளகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தசநாயக்க, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எம். கே.கோணார, சப் இன்ஸ்பெக்டர் இ.சேந்தன் ஆகியோர் மாணவர்களுக்கான கருத்துரைகளை வழங்கினர். இந்நிகழ்வில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவினர் நெறியாள்கை செய்த போதைப்பொருள் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது.

## நடேசனின் இரண்டு நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.24

புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளரும் மருத்துவருமான நடேசனின் ‘எக்ஸைல்’ (ஈழப்போராட்ட கால அனுபவங்களின் தொகுப்பு) வெளியீடும் ‘கானல் தேசம்’ (நாவல்) அறிமுகமும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாண நகரில் உள்ள றிம்மர் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் மகேந்திரன் திருவரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விமர்சனவுரைகளை ஊடகவியலாளர் பூபாலரட்ணம் சீவகன், கிரிஷ்–ாந், யதார்த்தன், எழுத்தாளரும் திரைப்பட இயக்குநருமான ஹஸீன் ஆகியோர் ஆற்றுகின்றனர். நூல்களை டான் தொலைக் காட்சிக் குழுமத்தின் தலைவர் குகநாதன், எழுத்தாளர் க. சட்டநாதன் வெளியிட்டு வைக்கவுள்ளனர். நிகழ்வில் பங்கேற்று உரையாடல்களை நிகழ்த்துமாறு நண்பர்கள், எழுத்தாளர்கள், ஊடகத்துறையினர், கவிஞர்கள், வாசகர்கள் அனைவரையும் மகிழ் வெளியீட்டகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நாளை

25.01.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் மு.இ 10.28 வரை
திதி : பஞ்சமி பி.இ 12.42 வரை
சுபநேரம் : 6.36 - 8.06 வரை
இராகுகாலம் : 11.06 - 12.36 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டமைக்கு எதிராக வவுனியா நேரியகுளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜன.24

வவுனியா நேரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஐந்து கிராமமக்கள் தமக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை நிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா நேரியகுளம் கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட நேரியகுளம், இலுப்பைக்குளம், வேப்பங்குளம், அழகாபுரி, அடம்பன்குளம் ஆகிய ஐந்து கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் 40 வீடுகள் வழங்கப்பட்டு பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் இவ்வீட்டுத்திட்டம் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. பத்து லட்சம் ரூபா பெறுமதியான இவ்வீட்டுத்திட்டம் எதுவித அறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் வவுனியா வெங்க லச்செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் 'வீட்டைக் காட்டி இனத்தை பிரிக்காதே', 'குடிசை வீடா நிரந்தர வீடா தீர்மானிப்பது அரச அதிகாரியே', 'உரிமை எங்களது கடமை உங்களது', 'சீராக திட்டங்கள் வகுக்கப்படாத வீட்டுத் திட்டம்', 'வழங்கிய வீட்டை மீண்டும் தா' போன்ற பல்வேறு பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வந்த உதவி பிரதேச செயலாளர் முகுந்தன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இப்பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்தார்.

மேலும் இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் மீள்குடியேற்ற அமைச்சினால் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளத்துக்கு 330 வீடுகள் வழங்கப்பட்டதன் அடிப்படையிலேயே நேரியகுளம் கிராமசேவகர்பிரிவுக்கு 40 வீடுகளுக்குரிய பயனாளர்கள் தெரிவு நடைபெற்றது.

தற்போது மீள்குடியேற்ற அமைச்சினால் 330 ஆக இருந்த எண்ணிக்கை 150 ஆக குறைக்கப்பட்டது. இதன் காரணமாக கூடுதலாக வீடுகள் தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட வீடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஏனைய குறை வான எண்ணிக்கையில் வழங் கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். இதன் அடிப்படையில் 40 வீடுகள் வழங்கிய நேரியகுளம் கிராம சேவகர் பிரிவுக்கான வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டது என தெரிவித்தார்.

இருந்த போதும் ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளுக்கு அமைய முதற்கட்டமாக 10 வீடுகள் வழங்குவதாகவும் மிகுதி வீடுகளை அடுத்த வீட்டுத்திட்டத்தில் ஏனையவர்களுக்கு வழங்குவதாகவும் தெரிவித்ததன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (100)

# போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஊர்வலம்



மட்டக்களப்பு,ஜன.24

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியுடன் கல்வி அமைச்சும் இணைந்து இவ்வாரம் தேசிய போதைப்பொருள் வாரமாக பாடசாலைகளில் பிரகடனப்படுத்தப்பட்டு விழிப்புணர்வு ஊர்வலங்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பிள்ளைகளிடம் கற்றுக்கொள்வோம் எனும் தொனிப்பொருளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் ஊர்வலம் மாளிகைக்காடு சபீனாமுஸ்லிம்வித்தியாலயஅதிபர்எம்.ஐ.எம்.அஸ்மி தலைமையில் மாணவர்களால் நேற்றுமுன்தினம் (22) முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி ஊர்வலம் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு மாளிகைக்காடு பிரதான வீதியூடாகச்சென்று மீண்டும் பாடசாலையைச் சென்றடைந்தது. இந்த ஊர்வலத்தில் அதிபர், ஆசிரியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இலங்கை இராணுவத்தினர், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில்

# ஆசிரியைகளை கடத்த முயற்சி காடையர்கள் மடக்கிப் பிடிப்பு

கிளிநொச்சி,ஜன.24

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் ஏ-32 வீதியால் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த ஆசிரியைகள் இருவரைக் கடத்த முற்பட்ட காடையர்களை மடக்கிப் பிடித்த இராணுவத்தினரும் மக்களும் இணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 6.50 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ஜெயபுரம் பாடசாலைக்கு ஏ-32 வீதியூடாக மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஆசிரியைகள் இருவரை பூநகரி ஜெயபுரம் மண்டைக்கல்லாறு பாலத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் வைத்து வழிமறித்த நால்வர் கொண்ட காடையர் குழுவினர் அவர்களை அச்சுறுத்தி காட்டுப் பகுதிக்குள் கடத்திச்செல்ல முற்பட்ட வேளை ஆசிரியைகள் இருவரும் செய்வதறியாது அலறியுள்ளனர்.

அவர்கள் காட்டுப் பகுதியில் கத்தும் சத்தம் கேட்ட வீதியால் சென்ற மக்களும் காட்டுப் பகுதிக்குள் முகாமை அமைத்திருந்த இரா ணுவத்தினரும் அவ்விடத்துக்குவிரைந்துள்ளனர். அதனை அவதானித்த காடையர்கள் ஆசிரியைகளைக் கடத்தும் முயற்சியைக் கைவிட்டு அவர்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஓட முற்பட்ட வேளை இராணுவத்தினரும் மக்களும் இணைந்து காடையர்கள் இருவரைப் பிடித்து ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும் கடத்தல்காரர்கள் இருவர் தப்பிச் சென்றுவிட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

பிடிபட்ட இருவரும் விசுவமடு மற்றும் முள்ளியவளை ஆகிய பகுதிகளைச்சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முல்லை மீனவர்கள் நலன்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஜன.24

முல்லைத்தீவு மீனவர்களின் நலன்கள் தொடர்பில், கடற்றொழில் அமைச்சின் காரியாலயத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. .

கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சின் பிரதான காரியாலயத்தில், நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மீனவர்களின் நலன்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மற்றும், திணைக்களப் பிரதிநிதிகளுடனும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமேளனத் தலைவர் பேதுருப்பிள்ளை பேரின்பநாதன், மற்றும் சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து இந்த மீனவர் நலன்சார்ந்த கலந்துரையாடலை மேற் கொண்டனர்.

அத்துடன் இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்து கொண்டார். (எ)

# ரூ. 1000 சம்பள உயர்வு கோரி தொடரும் போராட்டங்கள்

பொகவந்தலாவ,ஜன.24

பெருந்தோட்ட தொழிலாளர்களின்சம்பளஉயர்வுகோரிநேற்று நாடுதழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்தில் 1000 ரூபாய் இயக்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நாட்டின்பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக திகழும் பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்களுக்குஏன்ஆயிரம்ரூபாவை வழங்க முடியாது என கேள்வி எழுப்பியுள்ள பொகவந்தலாவ பகுதியை சேர்ந்த தோட்டத்தொழிலாளர்கள் முதலாளிமார் சம்மேளனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.



சுமார் 1000இற்கும் மேற்பட்ட பொகவந்தலாவ கெம்பியன், லின்போர்ட், லொய்னோன், நோட்கோ, பெற்றசோ, டெவன் போட், பிரிட்லேன்ட், ஆல்டி, கொட்டியாகலை, மோரா, செல்வகந்தை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்திலிருந்து எதிர்ப்பு வாசகங்களை எழுதிய சுலோகங்களை ஏந்தியவாறு பொகவந்தலாவ நகரம் வரை ஊர்வலமாக சென்றனர். அங்கு ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர். இதனால் அவ்வழியான போக்குவரத்து சுமார் 2 மணித்தியாலங்கள் தடைப்பட்டன. தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி சுகபோக வாழ்க்கையை நடத்தும் கம்பனிகாரர்கள் இன்றைய வாழ்வாதாரத்தினை நினைவில் வைத்துக் கொண்டு அடுத்த கட்ட பேச்சாக இறுதி பேச்சை முன்னிறுத்தி ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என அழுத்தமான கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# அமேதி தொகுதியை கைவிடுகிறார் ராகுல்

புதுடில்லி,ஜன.24

வரும் மக்களவை தேர்தலில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு அமேதி பெரும் சவாலாகி வருகிறது. இதனால், தொகுதி மாறி போட்டியிடும்படி உத்தரபிரதேச காங்கிரஸார் அவருக்கு யோசனை தெரிவித்துள்ளனர்.

கடந்த முப்பது வருடங்களாக அமேதி காந்தி குடும்பத்தின் ஆஸ்தான தொகுதியாக இருந்து வருகிறது. இடையில் 1998 மக்களவை தேர்தலில் மட்டும் காங்கிரஸின் வேட்பாளரான கப்டன் சதீஷ் சர்மா, பா.ஜ.கவின் சஞ்சய்சிங்கிடம் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தார்.

1999இற்கு பின் சோனியா காந்தி போட்டியிடத் தொடங்கிய பின் மீண்டும் அமேதியில் காங்கிரஸ் வலுப்பெற்றது. 2004 மக்களவை தேர்தலில் திடீர் என அரசியலில் குதித்த ராகுல், அமேதியில் போட்டியிட்டார்.

அமேதியில் ராகுலுக்கு 71 சதவிகித வாக்குகள் கிடைத்தன. ஆனால், அடுத்து வந்த தேர்தல்களில் இந்த சதவிகிதம் குறைந்து 2009இல் 66, 2014இல் 46 என்றானது.

அதேசமயம், பாஜகவுக்கு ஓரிலக்கத்தில் இருந்த வாக்கு சதவிகிதம் 2014இல் 37 என்றானது. இந்தமுறை ராகுலை எதிர்த்து பாஜகவில் ஸ்மிருதி இராணி போட்டியிட்டிருந்தார். இதன் பிறகு பா.ஜ.கவின் கவனம் அமேதியில் அதிகரித்தது.



இதன் பலனாக கடந்த 2017இல் நடைபெற்ற உபி சட்டப்பேரவை தேர்தலில் அமேதியின் ஐந்து தொகுதிகளில் பா.ஜ.கவுக்கு 4 கிடைத்தன. மீதியுள்ள ஒரு தொகுதியும் சமாஜ்வாதிக்கு சென்றதே தவிர அதை காங்கிரஸால் தக்க வைக்க முடியவில்லை.

இந்நிலையில், உபி முதல்வர் யோகி ஆதித்யநாத், அவரது தேசிய தலைவர் அமித்ஷா உள்ளிட்ட பல பாஜக தலைவர்கள் அமேதிக்கு பலமுறை வந்து கூட்டம் நடத்தினர். கடந்த வாரம் அமேதிக்கு வந்த மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதியும் ரூ.77 கோடிக்கான வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்தார்.

இதனால், மீண்டும் போட்டியிடும் ஸ்மிருதிக்கு அமேதியில் ஆதரவு பெருகி வருவதாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாக, ராகுல் வரும் தேர்தலில் தொகுதி மாறுவது நல்லது என உபி காங்கிரஸார் அவருக்கு யோசனை கூறி உள்ளனர்.

## சபரிமலையில் சாமி தரிசனம் செய்த கனகதுர்கா வீட்டிலிருந்து விரட்டியடிப்பு



சபரிமலை ஐயப்பன் கோயிலில் சாமி தரிசனம் செய்த கனகதுர்காவை அவரது மாமியார் வீட்டை விட்டு விரட்டியசம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சபரிமலை சுவாமி ஐயப்பன் கோவிலுக்கு கேரளாவைச் சேர்ந்த கனகதுர்கா, பிந்து ஆகிய 2 பெண்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் கனகதுர்கா மலப்புரத்தில் உள்ள தனது வீட்டுக்கு சென்றபோது அவரது மாமியார் தாக்கியதில் அவருக்கு படுகாயம் ஏற்பட்டதால் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது உடல் நலம் தேறியதை தொடர்ந்து கனகதுர்கா மலப்புரத்தில் உள்ள தனது வீட்டுக்கு மீண்டும் சென்றார். இந்த முறை அவருடன் பொலிஸாரும் பாதுகாப்புக்குச் சென்றார்கள்.

ஆனால் கனகதுர்காவை வீட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று அவரது கணவர், சகோதரர் மற்றும் உறவினர்கள் கூறிவிட்டனர்.

பொலிஸார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பொலிஸார் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதை அவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். இதனால் வேறு வழி இல்லாமல் கனகதுர்காவை பொலிஸார் அங்கிருந்து அழைத்துச் சென்றனர். தற்போது அவர் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளார்.

## மெரீனாவில் ஜெயலலிதா நினைவிடம் எதிர்ப்பு தெரிவித்த மனு தள்ளுபடி

மெரினா கடற்கரையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தேசிய மக்கள் கட்சித் தலைவர் எம்.எல்.ரவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், சொத்துக்குவிப்பு வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கு, அரசு பணத்தில் நினைவிடம் அமைக்கக் கூடாது என குறிப்பிட்டிருந்தார்.

நேற்று (புதன்கிழமை) இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் அரசு நிதியில் ஜெயலலிதா நினைவிடம் கட்டுவதை எதிர்த்த வழக்கறிஞர் எம்.எல்.ரவியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்கு முன்பாக ஜெயலலிதா இறந்துவிட்டமையால் தண்டனை அறிவிக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டியுள்ள நீதிபதிகள், அதனடிப்படையில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட குற்றவாளி இல்லை என்ற அரசு தரப்பு விளக்கத்தை ஏற்று மனுவை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டனர். (ஏ)

## பிரதமர் வேட்பாளராக மோடி ஏற்க மறுக்கிறது சிவசேனா

மோடிதான் பிரதமர் வேட்பாளர் என்றால் பா.ஜனதாவுடன் கூட்டணி இல்லை என்று சிவசேனா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த கட்சியின் எம்.பி. சஞ்சய் ராவத் அளித்துள்ள பேட்டியில் கூறியவை வருமாறு

இந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதாவுடன் சிவசேனா கூட்டணி வைக்காது. நாங்கள் அந்த கட்சியுடன் மிகவும் நெருக்கமாக இல்லை. 2014 தேர்தல் போல் பா.ஜனதாவுடன் எங்கள் உறவு இல்லை. பா.ஜனதாவுடன் கூட்டணி என்ற வார்த்தை இனி எங்கள் அகராதியில் கிடையாது.

பிரதமர் பதவிக்கு நிதின் கட்காரியை முன்னிறுத்த வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே நாங்கள் பா.ஜனதாவுக்கு ஆதரவு அளிப்போம். மோடியை முன்னிறுத்தினால் நாங்கள் ஆதரவு அளிக்க மாட்டோம்.

## காங்கிரஸ் பொதுசெயலராக பிரியங்காவுக்கு நியமனம்



காங்கிரஸ் தலைவர் ராகுலின் சகோதரி பிரியங்கா, உபி, மாநிலகிழக்கு பகுதி பொது செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம், அவர் நேரடி அரசியலுக்கு அழைத்து வரப்பட்டார்.

பிரியங்கா, இதுவரை தாயார் சோனியா மற்றும் சகோதரர் ராகுலுக்கு ஆதரவாக, அவர்கள் போட்டியிடும் ரேபரேலி மற்றும் அமேதி தொகுதிகளில் மட்டுமே பிரசாரம் செய்தார். தீவிர அரசியலில் ஈடுபட்டது கிடையாது.

இந்நிலையில், பிரியங்கா, உத்தர பிரதேச மாநில கிழக்கு பகுதி பொது செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் அவர் நேரடி அரசியலுக்கு வந்துள்ளார்.

## தேர்தல் கூட்டணி குறித்து பிரதமர் மோடி அறிவிப்பார்

நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி குறித்து பிரதமர் மோடி முறையாக அறிவிப்பார் என்று மதுரையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது முரளிதர ராவ் கூறினார்.

மதுரை பெருங்குடி அருகே உள்ள மண்டேலா நகர் ரிங் ரோட்டில் எய்ம்ஸ் மருத்துவமனையின் அடிக்கல் நடும் விழா, பா.ஜ.க. மாநாடு நடைபெறும் இடங்களை மத்திய மந்திரி பொன் ராதாகிருஷ்ணன், தேசிய செயலாளர் முரளிதர ராவ் ஆகியோர் பார்வையிட்டனர்.

பின்னர் முரளிதர ராவ் நிருபர்களிடம் கூறுகையில் அரசியல், கலை, பண்பாடு ஆகியவற்றில் மதுரை முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும். இங்கு பிரதமரின் முதல் கூட்டம் நடைபெறுவது சிறப்பு வாய்ந்தது.

2014இல் இருந்து பா.ஜ.க. அரசு இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு கூடும் முதல் கூட்டம் என்பதால் பெரும் வரவேற்பு உள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி குறித்து கட்சியின் தலைவர் அமித் ஷா, பிரதமர் மோடி ஆகியோர் மட்டுமே முடிவு செய்வார்கள். அது பற்றி நாங்கள் கூற முடியாது.

தி.மு.க., அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி என்று பலர் கருத்து கூறுகின்றனர். ஆனால் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன்தான் கூட்டணி அறிவிப்பு வரும். அதனை பிரதமர் மோடி முறையாக அறிவிப்பார்.

## ரஜனி மகள் மறுமணம் பெப். 10இல்



ரஜனி மகள் சவுந்தர்யாவின் 2ஆவது திருமணம் சென்னையில் வரும் 10ஆம் திகதி நடக்கிறது. தொழில் அதிபரின் மகனான நடிகர் விசாகனை மணக்கிறார்

சவுந்தர்யா தொழில் அதிபர் அஸ்வின் என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு வேத் என்ற மகன் உள்ளார்.

இந்த நிலையில் சவுந்தர்யா – அஸ்வின் இடையே திடீர் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் 2 வருடங்களுக்கு முன்பு இருவரும் விவாகரத்து செய்து பிரிந்தனர். அதன் பிறகு மகனுடன் தனியாக வசித்து வந்தார்.

இந்த நிலையில் சவுந்தர்யாவுக்கு தொழில் அதிபர் வணங்காமுடியின் மகனான விசாகன் என்பவருடன் திருமணம் நிச்சயமாகி உள்ளது. விசாகன் அமெரிக்காவில் எம்.பி.ஏ படித்தவர். 'வஞ்சகர் உலகம்' என்ற படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார்.

சவுந்தர்யா – விசாகன் திருமண நிச்சயதார்த்தம் இரு வீட்டு பெற்றோர் சம்மதத்துடன் சமீபத்தில் நடந்து முடிந்துள்ளது. இவர்கள் திருமணம் அடுத்த மாதம் (பெப்ரவரி) 10ஆம் திகதி சென்னை போயஸ் கார்டனில் உள்ள ரஜனிகாந்த் இல்லத்தில் எளிமையாக நடக்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir





# பனி நீர் வீழ்ச்சியாக மாறியுள்ள நயாகரா

நியூயோர்க்,ஜன.24

வட அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி தற்போது உறைந்து பனி நீர்வீழ்ச்சியாக காணப்படுகிறது.

வட அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள புகழ் மிக்க பேரருவி நயாகரா ஆகும். இது கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்துக்கும், அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்துக்கும் இடையேயான எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் இயற்கை அழகினை காண ஆண்டு தோறும் ஒரு கோடி மக்கள் வருகை தருகின்றனர். இது சுமார் 56 கி.மீ நீளம் கொண்டது.

இந்நிலையில் அமெரிக்காவில் தொடர்ந்து நிலவும் குளிர்கால நிலை, காற்று, புயல் போன்ற சூழ்நிலைகள் இந்த வார இறுதியில், நயாகரா நீர்வீழ்ச்சியை பனிவீழ்ச்சியாக மாற்றியுள்ளது.

இதன் விளைவாக நயாகரா நீர்வீழ்ச்சியில் ஒரு பனி சுவர் போன்ற அமைப்பு உருவானது. இதனை யடுத்து பார்வையாளர்கள் நயாகரா நீர்வீழ்ச்சி யின் அற்புத காட்சியினை படம் பிடித்து சமூக ஊடகங்களில் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வருகின்றனர். இதேபோல் கடந்த ஆண்டும், இதே சீசனில் நீர்வீழ்ச்சிகள் உறைந்தமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் லசா காய்ச்சல் இதுவரை 16 பேர் உயிரிழப்பு

லாகோஸ்,ஜன.24

நைஜீரியாவில் வேகமாக பரவி வரும் புதிய லசா காய்ச்சலால் இதுவரை 16 பேர் பலியாகி உள்ளனர்.



உலகின் மிக மோசமான நோய்களில் ஒன்றான லசா காய்ச்சல் கடந்த ஆண்டு தொடக்கத்தில் திடீரென வேகமாக பரவி, 23 நாடுகளை தாக்கி, 171பேரைக் கொன்றது. இந்த நோய் நைஜீரியாவில் மீண்டும் பரவி வருகிறது.

நைஜீரியாவில் லசா காய்ச்சலுக்கு இதுவரை 16 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது 26.7 சதவிகித இறப்பு விகிதம் உறுதி செய் யப்பட்டுள்ளதாகவும் தேசிய மையக் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 172 நோயாளிகள் லசா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. பரிசோதனையின் முடிவில் 60 பேருக்கு



உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் நைஜீரியாவின் 36 மாநிலங்களில் உள்ள ஏழு இடங்களிலும், அபுஜாவின் தலைநகரத்திலும் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் நைஜீரிய சுகாதார அதிகாரிகள், உலக சுகாதார அமைப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டுக்கான அமெரிக்க மையங்களுடன் இணைந்து மேற்கொள்கின்றனர்.

இந்த வைரஸ் எலிகள் மூலமாகவும், இந்நோய் பாதிக்கப்பட்டவர்களின் தொற்றினாலும் பரவ அதிக வாய்ப்புள்ளது. மேலும் இந்நோய் பரவுவதை தடுக்க சுகாதாரத்துடனும், எலிகளின் தொற்று இல்லாமலும் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டன் பொலிஸ்காரரின் மட்டகரமான செயற்பாடு

லண்டன்,ஜன.24

பிரித்தானியாவில் பொலிஸ்காரர் ஒருவர் தனது மனைவி மற்றும் பல பெண்களை பாலியல் தொழிலுக்கு அனுப்பி அதன் மூலம் ராஜ வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த கார்ல் ரிங் என்பவர் பொலிஸ் அதிகாரியாக பணி புரிந்து வருகிறார். இவருக்கு ஐவெட் என்ற மனைவி இருக்கிறார். கணவன் மனைவி இருவருமே பணத்தாசை பிடித்தவர்கள். குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க நினைத்த இவர்கள் பெண்களை வைத்து பாலியல் தொழில் செய்ய முடிவு செய்தனர்.



அதன்படி பல பெண்களை மயக்கி பாலியல் தொழில் செய்து வந்தனர். கொடுமை என்னவென்றால் கார்ல் தனது மனைவியையும் பாலியல் தொழிலில் தள்ளியுள்ளார். கிடைத்த பணத்தை வைத்து உல்லாச வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளனர்.


இந்நிலையில் இதுகுறித்து பொலிஸிடம் புகார் அளிக்கப்பட்டதன் பேரில் அவர்கள் இந்த தம்பதியரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அமெ. அரசுத்துறைகள் முடக்கம் தொடர்பாக

# பாடகி லேடி காகா ட்ரம்புக்கு கண்டனம்

வொஷிங்டன்,ஜன.24

அமெரிக்காவில் அரசுத்துறைகள் முடக்கம் தொடர்பாக, ஜனாதிபதி ட்ரம்புக்கு பாடகி லேடி காகா கண்டனம் தெரிவித்துள்ளார்.



மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் பிரச்சினை காரணமாக அமெரிக்காவில் பல்வேறு அரசுத்துறைகள் கடந்த 4 வாரங்களாக முடங்கி உள்ளன. இதனால் அரசு ஊழியர்கள் கடும் இன்னலுக்கு ஆளாகி உள்ளனர்.

இந்த நிலையில், இந்தவிவகாரம்தொடர்பாக ட்ரம்புக்கு கடும் கண்டனம் தெரிவித்த ஹொலிவுட் திரையுலகின் பிரபல பாடகி லேடி காகா, அரசுத்துறைகள் முடக்கத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரும்படி வலியுறுத்தி உள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், அரசுத்துறைகள் வழக்கம் போல் சீராக இயங்குவதற்கான சூழ்நிலையை ஜனாதிபதி டிரம்ப் கொண்டு வர வேண்டும்.

ஏனெனில் வாரந்தோறும் கிடைக்கும் ஊதியத்தை நம்பித்தான் அரசு ஊழியர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பிழைத்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

# ஆர்ஜென்டீன கால்பந்து வீரர் சென்ற விமானம் மாயம்

ஆர்ஜென்டீன கால்பந்து வீரர் எமிலியானோ சலா பயணம் செய்த விமானம் மாயமானதை யடுத்து, அவரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் எமிலியானோ சலா. பிரான்ஸின் நான்டஸ் அணிக்காக விளையாடி வந்த இவரை, வேல்ஸ் நாட்டின் கார்டிப் கிளப் அணி சமீபத்தில் வாங்கியது. கடந்த சனிக்கிழமை கார்டிப் நகரில் இதற்கான ஒப்பந்தத்தில் எமிலியானோ கையெழுத்திட்டார். பின்னர் பிரான்ஸ் திரும்பிய எமிலியானோ சலா, திங்களன்று மாலை ஒரு தனியார் விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

சானல் தீவுகளுக்கு அருகே திடீரென அவரது விமானம் மாயமானது. விமானத்தில் பயணம் செய்த எமிலியானோ மற்றும் விமானி குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

சலா சென்ற விமானம் விபத்தில் சிக்கியதை பிரான்ஸ் விமான போக்குவரத்து ஆணையம் உறுதி செய்துள்ளது. பைபர் மாலிபு என்ற சிறிய விமானம், திங்கட்கிழமை மாலை 7.15 மணிக்கு நான்டஸிலிருந்து புறப்பட்டு ஒரு மணி நேரத்துக்குப் பிறகு காஸ்கட்ஸ் கலங்கரை விளக்கத்துக்கு அருகே மாயமானதாகவும், அதில் சலா பயணம் செய்தார் என்றும் தெரிவித்துள்ளது. ஆனால், விமானம் ராடரில் இருந்து எப்படி மறைந்தது என்பது குறித்து எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

இது குறித்து கார்டிப் அணியின் தலைமை நிர்வாக அதிகாரி கென் சூ கூறுகையில், 'பிரீமியர் லீக் கிளப்பில் உள்ள அனைவரும் நிலைமையை உணர்ந்து மிகுந்த வருத்தத்தில் உள்ளனர். எனினும் விரைவில் நல்ல தகவல் கிடைக்கும் என நம்பிக்கையில் பிரார்த்தனை செய்கின்றனர்' என்று கூறினார்.

## நவாஸ் ஷெரீப் மருத்துவமனையில்; மருத்துவ அறிக்கையும் வழங்க மறுப்பு

# மகள் மரியம் நவாஸ் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஜன.24

ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல் – அஸிஸியா இரும்பு ஆலை ஊழல் வழக்கில் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், லாகூரில் உள்ள கோட் லக்பத் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், உடல் நலக் குறைவு காரணமாக நவாஸ் ஷெரீப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து, அவரது மகள் மரியம் நவாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எனது தந்தை நவாஸ் ஷெரீபின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவர் தற்போது லாகூரிலுள்ள பஞ்சாப் இருதய நோய் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைக் காண அந்த மருத்துவமனைக்குச் செல்ல நான் விரும்பினேன்.



ஆனால், பாதுகாப்பு காரணங்களுக்காக அங்கு வர வேண்டாம் என்று எனது தந்தை மறுத்துவிட்டார். அவரது உடல் நிலை குறித்த மருத்துவ அறிக்கை எங்களுக்கு தரப்படவில்லை. இதுகுறித்து சிறைத் துறை அதிகாரிகளிடமும், பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சகத்திடமும் பல முறை கோரிக்கை விடுத்தும் எந்தப் பலனுமில்லை இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாரம்பரிய முறையில் பாடசாலை வருகை




வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு பாரம்பரிய முறையில் எஸ். நாகராசா என்ற மாணவன் பாடசாலை ஆரம்பித்த நாளன்று (02.01.2019) குதிரை வண்டியில் வருகை தந்து தரம் 1 இல் சேர்ந்துள்ளார். (இ – ரி)



வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்கோள் விழா அதிபர் ப.பிரதாபன் தலைமையில் நடைபெற்றபோது விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.கணேசன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சபா. குகதாஸ் கிராம அலுவலர் திருமதி. பி.தயாகரன் ஆகியோர் கலந்து கொண்டு தரம் 1ல் சேர்ந்த மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (இ – ரி)







புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 102 ஆவது ஜனன தினத்தை யாழ். பாஷையூர் எம். ஜி.ஆர். நற்பணி மன்றத்தினர் அனுஷ்டித்தனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய துணைத்தூதுவர் எஸ். பாலச்சந்திரன், யாழ். மாநகர முதல்வர் இ.ஆனோல்ட், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். எம்.ஜி.ஆர். சுந்தரலிங்கம், சமூகசேவையாளர் எம். கருணாமூர்த்தி, கலைக்குரிசில் எம்.எல்.லாபிர் கலந்து கொண்டனர். மலையக கலைஞர் ஈழத்து பாலசுப்பிரமணியம் எம்.ஜி.ஆர் பாடல்களை பாடினார். (இ – 19)





'சொண்ட்' நிறுவனம் தமது திட்டங்களை சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், உரையாற்றுகின்றமையும், அருகில் சொண்ட் நிறுவன பணிப்பாளர் ச.செந்துராசா, சுகாதாரா வைத்திய அதிகாரி ச.சிவதாசன், யுனிசெவ் பிராந்திய முகாமையாளர் ந.சுதர்மன், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. ர.ரதிநகுலேஸ்வரன், சிறுவர் மேம்பாட்டு அலுவல்கள் மாவட்ட இணைப்பாளர் க.மனோகரன் ஆகி யோர் அமர்ந்திருக்கின்றமையையும் மற்றும் பங்குபற்றியவர்களையும் காணலாம். இ

புரட்சி நடிகர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 102 ஆவது ஜனன தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். கல்வியங்காடு சந்தை அருகிலுள்ள எம்.ஜி.ஆர். சிலை அருகில் யாழ். எம்.ஜி.ஆர்.எம். சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் உடுபுடைவைகளும், அப்பியாசப் புத்தகங்களும், மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (இ – 19)

**படம் :- எம்.எல்.லாபிர்**













யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் இணைப்பாளராக கடந்த மூன்று வருடம் கடமையாற்றி மாற்றலாகியவரான பரமலிங்கம் தமிழ் மாறனுக்கு கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் பிரதேச செயலர் பொ. தயானந்தன் தலைமையில் பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றபோது... (இ – 19)

படம் :- எம்.எல்.லாபிர்

## புகைத்தல், வெற்றிலை மெல்ல தடை

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனைத்து பொதுச் சந்தைகளின் உட்பகுதிகளில் புகைத்தல், வெற்றிலை மெல்லுதல் மற்றும் மதுபானம் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக கரை துறைப்பற்று பிரதேசசபை அறிவித்துள்ளது.

பொதுச்சந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் பொதுமக்களின் நலன் கருதியும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் இந்த ஒழுங்கு படுத்தல் புகைப் பொருள் மற்றும் வெற்றிலை விற்பனையாளர்களின் மூலம் நடை முறைப் படுத்தப் பட்டுள்ளதாக கரைதுறைபற்று பிரதேசசபை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஜனநாயக தேசிய முன்னணி இரு வாரங்களுக்குள் மலரும்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஜன.24

புதிய அரசியல் கட்சியான ஜனநாயக தேசிய முன்னணி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அமைக்கப்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி உள்ளிட்ட ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புக்களை ஒன்றிணைத்து புதிய அரசியல் சக்தி ஒன்றைக் கட்டியெழுப்புவோம் என்றும் பிரதமர் ரணில் கூறினார்.

தெமட்டகொடையில் இடம்பெற்ற சியபத் செவன வீடமைப்பு திட்டத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதே இந்த அரசியல் கூட்டணியின் நோக்கமாகும் எனவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார். (ஐ)

# படைப் புழுவை ஒழிப்பதற்காக 15 வகை திட்டங்கள் பரிந்துரை



கொழும்பு, ஜன. 24

படைப்புழுவை ஒழிப்பதற்காகப் பல்வேறு தரப்பினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள 15 வகையான படைப்புழு ஒழிப்பு முறைமைகளை விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்நாட்டு முறைமையினால் படைப்புழுவை ஒழிப்பதற்கு இயலுமானால், அதுவே பெரும் வெற்றி எனப் படைப்புழு ஒழிப்புப் பிரிவின் பிரதானி அநுர விஜேதுங்க குறிப்பிட்டார்.

சுயதயாரிப்பின் மூலம் சில விவசாயிகள், படைப் புழுவை ஒழிப்பதற்கான முறைமைகளை முன்வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இவற்றைப் பரிசோதனைக்குட்படுத்தி விவசாயக் காணிகளுக்கு பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் படைப்புழு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் விவசாயக் காணிகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள படைப்புழுவை ஒழிப்பதற்கு ஏதேனும் முறைமைகள் காணப்படின், உடனடியாக விவசாயத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் அநுர விஜேதுங்க மக்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்காக 5 வகையான கிருமிநாசினிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் படைப்புழு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அநுர விஜேதுங்க மேலும் தெரிவித்தார். (ஐ)

## தமிழரின் போராட்டத்தை சுமந்திரன் முன்னெடுப்பு!

### கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 24

தமிழர்களின் அடுத்தகட்டப் போராட்டத்தை இப்போது சுமந்திரன் எம்.பி. முன்னெடுத்து வருகின்றார் என மஹிந்த அணியின் நாடாளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித் துள்ளார்.

தெரண தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழர்களின் பிரிவினைப் போராட்டத்தை முதலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் ஆரம்பித்தார்.

பின்னர் இரண்டாம் கட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தினார். அடுத்த கட்டத்தை இப்போது சுமந்திரன் முன்னெடுக்கின்றார்– என்றார். (ஐ)

## மணவாளக்கோல உற்சவம்

சாவகச்சேரி, ஜன.23

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரா ஆலய மணவாளக்கோல உற்சவம் 26.1.2019சனி காலை 8.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

அபிஷேகம் மகேஸ்வரபூசை நிறைவில் எம்பெருமான் பெருமாட்டி சகிதம் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி அளிப்பார். அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக கலந்துகொண்டு அவன் அருள் பெற்றுய்யுமாறு ஆலய பாபாலன சபையினர் வேண்டி நிற்கின்றனர்.

## கால்கோள் விழா

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் கால்கோல் விழாவும் அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் இன்று வியாழக்கிழமை காலை 7.40 மணிக்கு பகுதித் தலைவர் த.சிவபாலன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் ரீ. பால்ராஜ், கௌரவ விருந்தினராக யாழ். மாநகர சபை உறுப்பினர் லயன். நா. தனேந்திரன், மத்தியஸ்தர் சபைத் தலைவர் வி.ஸ்ரீ. சக்திவேல் ஆகியோர் கலந்து கொள்வர். பழைய மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், ஆசிரியர்கள் கௌரவிப்பு, கற்றல் உபகரணம் வழங்கல், போதைப் பொருள் விழிப்புணர்வுக்கு கருத்துரை நடைபெறும். (இ – 19)

# வடக்குக்கு ஒரு முகமும் தெற்குக்கு வேறொரு முகமும் காட்டும் ஐ.தே.க.

## சாடுகின்றார் வியாழேந்திரன் எம்.பி.



மட்டக்களப்பு, ஜன. 24

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களும், எம்.பிக்களும் தென் இலங்கையில் ஒரு முகத்தையும் வடக்கு–கிழக்கிலுள்ள தமிழ்த் தலைமைகளுக்கு வேறொரு முகத்தையும் காட்டுகிறார்கள். இதை நம்பி ஒரு சிலர் ஏமாறுவது வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் கவலை வெளியிட்டுள்ளார்.

வியாழேந்திரன் எம்.பியின் கோரிக்கைக்கு அமைய, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் 65 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தலைவர்கள் சிலர் நல்லிணக்கம்பேசிக்கொண்டுகாலத்தை கழிக்கின்றார்கள்.

ஆனால் மற்றைய சமூக அரசியல்வாதிகள் நல்லிணக்கம் என்ற போர்வையிலே கிழக்கில் உள்ள தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்வதற்குரிய வேலைகளை இராஜதந்திரமாகவும் நாசுக்காகவும் செய்துகொண்டிருக்கின்றனர்.

இன்று கிழக்கு தமிழ்த் தலைமைகளுக்கு மற்றைய சமூக அரசியல்வாதிகள் நற்சான்றிதழ் கொடுக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் செல்கின்றன என்பதை மக்கள் அறிந்திருக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்திலே நாளுக்கு நாள் தமிழர்களின் இருப்பும் வளமும் சூறையாடப்பட்டு வருகிறது. ஒரு வாரத்திற்குள் கிழக்கு மாகாணத்திலிருந்து 18 பேர் தமிழர்கள் இனமாற்றப்படுகின்றார்கள், 115 சதுரகிலோ மீற்றர் அளவான நிலப்பரப்பு 2009ஆம் ஆண்டிற்கு பின் மட்டக்களப்பு மாவட்டத்திலே பல கோணங்களில் அபகரிக்கப்பட்டு இருக்கிறது.

இங்கு எமது மாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகளுக்குச் சிலர் பிச்சைச் சம்பளம் கொடுக்கின்றனர். 10இலட்சம் ரூபா பெறுமதியான வீதி மற்றும் 2இலட்சம் ரூபாவுக்கு கிரவல் வீதி போன்றவற்றை கொடுத்து சிறிய மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கின்ற செயற்பாடு இடம்பெறுகிறது.

நாம் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு ஒவ்வொரு வரவு–செலவு திட்டத்திற்கும் அரசை வாழவைப்பதற்காகக் கைகளை உயர்த்தினோம். அதுமட்டுமல்லாது பிரதமருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோதும் கைகளை உயர்த்தினோம்.

முதல்தடவை நானும் உயர்த்தினேன். இரண்டாவது தடவை உயர்த்தவில்லை. இன்று கிழக்கில் என்ன நடந்துள்ளது. ஒன்றுமேயில்லை தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வா அந்தத் தீர்வும் இன்று எமக்கு கேள்விக்குள்ளாகியுள்ளது– என்றார். (ஐ)

# குளிரான காலநிலை நாட்டில் தொடரும்

கொழும்பு, ஜன. 24

நாட்டில் நிலவிவரும் குளிரான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு கடற்பரப்புக்களில் சிறிதளவான மழைவீழ்ச்சி காணப்படுமென தெரிவித்துள்ள அந்தத் திணைக்களம், நாட்டின் ஏனைய பகுதிகளில் சீரான வானிலை நிலவுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியுள்ளது.



நாட்டில்கடந்த சில நாள்களாக காலை மற்றும் மாலை வேளைகளில் கடும்குளிரான வானிலை நிலவி வருகின்றது. சில பகுதிகளில் குறிப்பாக நுவரெலியா போன்ற மலைப் பகுதிகளில் கடும் பனியுடன் கூடிய காலநிலையே தொடர்ந்தும் நீடிக்கின்றது.



# இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி

டேர்பன்,ஜன.24

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இரண்டு அணிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் 2 ஆவது ஒருநாள் போட்டி டேர்பனில் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தேர்வுசெய்தது. இதையடுத்து முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி வீரர்கள் தொடக்கம் முதலே விக்கெட்டுக்களை பறிகொடுத்து தடுமாறினார்கள். பாகிஸ்தானின் ஹசன் அலி 59 (45) மட்டும் அதிரடியாக விளையாடி அரைச்சதம் கண்டார். இவர் 5 பவுண்டரிகளும், 3 சிக்சர்களையும் விளாசினார். அணித்தலைவர் சர்ப்ராஸ் அகமட் 41 (59) ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் அனைவருமே சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, 45.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்கள் எடுத்தது பாகிஸ்தான்.

தென்னாபிரிக்கா சார்பில் பெலுக்வாயோ 4 விக்கெட்டுகளும், ஷம்சி 3 விக்கெட்டுக்களையும், ரபாடா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

204 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர்களாக ஹெண்ட்ரிக்ஸ், அம்லா களமிறங்கினர். கின்ஷா அப்ரிடி வீசிய இரண்டாவது ஓவரை எதிர்கொண்ட அம்லா 8 (5) ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். கின்ஷா அப்ரிடி வீசிய நான்காவது ஓவரில், 5 ஓட்டங்கள் எடுத்திருந்த ஹெண்ட்ரிக்ஸ் ஸ்டம்பிங் செய்யப்பட்டார். அணித்தலைவர் டு பிளசிஸ் 8 ஓட்டங்களில் வெளியேறினார்.



இதையடுத்து ஹி வேன் டெர் டுசன், டேவிட் மில்லர் ஜோடி சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 42 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பொறுப்புடன் விளையாடிய டுசன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 80 (123) ஓட்டங்கள் சேர்த்தார். மில்லர் 31 (26) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் சார்பில் கின்ஷா அப்ரிடி 3 விக்கெட்டுக்களும், தப் கான் 2 விக்கெட்டுக்களும் வீழ்த்தினர்.

4 விக்கெட்டுகளை வீழ்த்திய தென்னாபிரிக்காவின் பெலுக்வாயோ ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்த போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில், 1-1 என தென்னாபிரிக்க அணி சமன் செய்தது. 3 ஆவது ஒருநாள் போட்டி 25 ஆம் திகதி செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.

# ரொனால்டோவுக்கு அபராதம்



போர்த்துக்கல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 16.5 மில்லியன் யூரோ அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த 33 வயதான ரொனால்டோ தற்போது இத்தாலியில் உள்ள யுவென்டஸ் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார்.

முன்னதாக அவர் 9 ஆண்டுகளாக ஸ்பெயினில் உள்ள ரியல் மாட்ரிட் கிளப் அணிக்காக விளையாடியதுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2014-ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் ரொனால்டோ ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடுகையில் கிடைத்த வருமானத்தை குறைத்து காட்டி வருமான வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து மாட்ரிட் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மாட்ரிட் நீதிமன்றத்தில் ஆஜரான கிறிஸ்டியானோ ரொனால்டோ குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், நீதிமன்றம் விதித்த அபராத தொகையை கட்ட இணக்கம் தெரிவித்தார்.

ரொனால்டோ கால்பந்து வீரர்களில் அதிக சம்பளம் பெறும் வீரர்களில் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செரீனா அவுட்



மெல்பேர்ன் நகரில் நடந்து வரும் ஆஸ்ரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர்பிரிவு காலிறுதிச் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் வெளியேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடந்தன. செக்குடியரசு வீராங்கனை கரோலினா பிலிஸ்கோவாவை எதிர்கொண்டார் முன்னாள் சம்பியனும் அமெரிக்க வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ்.

பரபரப்பாக 2 மணிநேரம் 10 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் செரீனாவை 6-4, 4-6, 7-5 என்ற செட்களில் போராடி வெளியேற்றினார் கரோலினா பிலிஸ்கோவா.

முதல் செட்டை தனக்கே உரிய ஸ்டைலில் வென்றார் செரீனா. அவரின் ஆவேசமான சேவீஸ்கள், பந்த திருப்பி அனுப்பும் வேகம், ஏஸ்கள் ஆகியவற்றால், 6-4 என்று வென்றார். ஆனால், 2-வது செட்டில் செரீனாவுக்கு கடும் நெருக்கடி அளிக்கும் வகையில், பிலிஸ்கோவா விளையாடினார். இதனால், செரீனா 4-6 என்ற கணக்கில் 2 ஆவது செட்டை இழந்தார். வெற்றியாளரை முடிவு செய்யும் 3 ஆவது செட்டில் இருவரும் கடுமையாக மோதிக்கொண்டனர். ஆட்டம் டைபிரேக்கர்வரை சென்ற நிலையில் 7-5 என்ற கணக்கில் செரீனாவை தோற்கடித்தார் பிலிஸ்கோவா. அரையிறுதியில் ஜப்பான் வீராங்கனை ஓசாகாவை எதிர்கொள்கிறார் பிலிஸ்கோவா.

24 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீராங்கனையான மார்கிரெட் கோர்ட் சாதனையை சமன் செய்துவிடலாம் என்ற கனவில் இருந்த செரீனாவுக்கு இந்தத் தோல்வி அதிர்ச்சியாக அமைந்தது.

## நியூஸிலாந்துடன் முதல் ஒருநாள் போட்டி

# 8 விக்கெட்டுக்களால் வென்றது இந்தியா

நேப்பியர்,ஜன.24

நேப்பியரில் நேற்று நடைபெற்ற நியூஸிலாந்துக்கெதிரான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 08 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் வில்லியம்சன் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன்படி போட்டியின் தொடக்கம் முதலே இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் நியூசிலாந்து வீரர்கள் திணறினர். தொடக்க வீரர்கள் குப்தில் 5 , முன்ரோ 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இந்த விக்கெட்டுகளை முகமது சமி கைப்பற்றினார். அதன்பின்னர் டெய்லர் (24), லாதம் (11) ஆகியோரை சாகல் வெளியேற்றினார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்தபோதும், வில்லியம்சன் நிதானமாக விளையாடி அரைச் சதம் கடந்தார். தொடர்ந்து ஸ்கோரை உயர்த்தவும் போராடினார். எனினும் மறுமுனையில் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன. வில்லியம்சன் 64 ஓட்டங்கள் எடுத்த நிலையில், குல்தீப் யாதவிடம் விக்கெட்டை இழந்தார்.



மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, நியூசிலாந்து அணி, 38 ஓவர் மட்டுமே தாக்கு பிடித்து 157 ஓட்டங்களில் அனைத்து விகெட்டையும் இழந்தது.

இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளும், முகமது சமி 3 விக்கெட்டுகளும் சாகல் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இந்திய அணி சார்பில் தவான், ரோகித் சர்மா இருவரும் களமிறங்கினர். இந்த இணைப்பாட்டம் 10 ஓவர்களில் 41 ஓட்டங்களை பெற்ற வேளை சூரிய ஒளி துடுப்பாட்ட வீரர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியபடியால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் ஆட்டம் தொடங்கி வேளையில் 49 ஓவர்களில் 156 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து ரோகித்சர்மா 11 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டமிழந்தார். பின்னர் தவானுடன் அணித் தலைவர் கோஹ்லி இணைந்தார். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்தநிலையில் அணி 132 ஓட்டங்களைப் பெற்ற வேளை கோஹ்லி 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் தவானுடன் அம்பதி ராயுடு இணைந்தார். இதன்போது 34.5 ஓவர்களில் 156 ஓட்டங்களைப் பெற்ற இந்திய அணி 08 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி பெற்றது.

தவான் 75, ராயுடு 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பிரேஸ்வெல், பெர்கியூசன் இருவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மொகமட் சமி தெரிவானார்.

## ஐ.நா. அமர்வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் வெளிவிவகாரப் பிரிவின் தெற்காசியத் திணைக்களத்தின் தலைவரும் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளருமான பார்கஸ் ஒல்ட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரை கொழும்பிலுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் இல்லத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நிலவரம் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், 2015 ஜனவரி மற்றும் ஓகஸ்ட் தேர்தல்களில் மக்கள் கொடுத்த ஆணையைச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட இரா. சம்பந்தன், சட்ட விரோதமானதும் அரசியல் சாசனத்திற்கு முரணானதுமான செயற்பாடுகளை நாம் எப்போதும் அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

அதேவேளை, நாம் அவ்வாறு செயற்படுகின்றபோது எல்லோரையும் திருப்திபடுத்த முடியாது எனவும், கொள்கையின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுக்கின்ற போது, ஏனைய விடயங்களை குறித்து பெரிதாகக் கவனம் செலுத்த முடியாது எனவும் கூறினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் விளக்கமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 2016ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மிக நீண்ட நடைமுறைகளும் முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதனை எடுத்துக் கூறினார்.

அதேவேளை, இரண்டு பெருன்பான்மை கட்சிகளும் புதிய அரசமைப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்களை குறித்து தமது மக்களுக்கும் கட்சியினருக்கும் தெளிவுபடுத்துவதில் அசமந்தப்போக்கைக் கொண்டுள்ளன எனவும் குற்றம்சாட்டினார்.

அதிகாரப் பரவலாக்கல் நேர்மையானது எனவும், மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரங்களை உபயோகிக்க கூடிய வகையில் இருத்தல் அவசியம் எனவும் வலியுறுத்திய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இதனை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் உண்மையான பிரச்சினை அரசியல்வாதிகளிடம் இது தொடர்பில் காணப்படும் அசமந்தபோக்கே ஆகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் கைகளில் அதிகாரங்கள் செல்லுகின்றவிடத்து ஊழல் மற்றும் வளங்கள் வீண்விரயம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்களை அது குறைத்து விடும். இதன் காரணமாக ஒருசில அரசியல்வாதிகள் மக்களிடம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு அஞ்சுகிறார்கள் எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், நீண்டகாலதேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாத பட்சத்தில் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை என்பதையும் எடுத்துரைத்தார்.

மேலும், இலங்கையின் வரலாற்றில் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளினதும் இயன்றளவு ஒத்துழைப்புடன் ஓர் புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கான முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதை சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன், நாங்கள் ஒருமித்த – பிரிபடாத – பிரிக்க முடியாத நாட்டுக்குள்ளே ஒரு தீரேவை எதிர்பார்க்கின்றோம் என்றும், நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு கொண்டுவரப்படுகின்றபோது நாங்கள் அதனை எமது மக்கள் முன் எடுத்துச் செல்லுவோம் என்றும், எமது மக்கள் அத்தகைய தீர்வுடன் கூடிய ஓர் புதிய அரசமைப்பை அங்கீகரிப்பதற்கு தமது ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்றும் கூறினார்.

சர்வதேச சமூகத்தின் வகிபாகம் குறித்து கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ள நிலையில் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வது தவிர்க்க முடியாததொன்று என்றும், சர்வதேச சமூகம் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், இது தொடர்பில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் குறித்த காலவரையறைக்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்துக் கருமங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணித்தியாலங்கள் நீடித்த இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் பிரிட்டன் தூதரகத்தின் அரசியல் பிரிவு பிரதானி போல் கிறீன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

## கே.கே.எஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான சேவை எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை ரயில்வே அறிவித்துள்ளது.

இலங்கை ரயில்வே திணைக்களத்தால் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதிய ரயில் காங்கேசன்துறை–கொழும்பு ரயில் மார்க்கத்தில் உத்தரதேவி சேவையாக ஈடுபடுத்தப்படவுள்ளது.

உத்தரதேவி தனது பரீட்சார்த்த சேவையைக் கடந்த ஒரு மாத காலத்துக்குள் இரண்டு தடவைகள் முன்னெடுத்திருந்தது.

இந்த நிலையில் குளிரூட்டப்பட்ட அதிவேக சொகுசு ரயிலான உத்தரதேவி கொழும்பு கோட்டையிருந்து காங்கேசன் துறை வரையிலான நிரந்தர சேவையை எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது. (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை விரைவாக நடத்த மேற்குலக நாடுகள் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளார் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.

நாட்டில் உள்ள ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் விடயத்தில் பொதுமக்களைவிட மேற்குலக இராஜதந்திரிகளுக்கே அதிகம் அக்கறை காணப்படுகின்றது. இவர்களே ஆட்சி மாற்றத்தின் போது ஜனநாயகத்தைப்பாதுகாக்குமாறு அழுத்தம் கொடுத்தார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய தேர்தல் ஆணையகத்தின் உறுப்பினர்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் எவ்விதமான அழுத்தங்களையும் அரசு மீது பிரயோகிக்கவில்லை.

கடந்த காலங்களில் பொது ஜன பெரமுனவினர் மாத்திரமே தேர்தலை நடத்தக்கோரி அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டனர். எதிர்வரும் நாட்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கோரி நீதிமன்றத்தை நாடவுள்ளோம். இவ்வேளையில் தேர்தல் ஆணையகத்தினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் – என்றார். (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீண்ட நேரம் விசாரணைகளை நடத்தினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்களைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாகவே, நாமல் ராஜபக்ஷவிடம் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

இந்தச் சதித்திட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்தியர் அளித்த தகவல்களின் அடிப்படையிலேயே நாமல் ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

தேசிய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகள் தொடர்பான கரிசனைகள் கொண்டது என்பதால், இந்த விசாரணைகள் சுதந்திரமான முறையில் இடம்பெறும் என்று நம்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறினார். (ஐ)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட அரசியல் விபத்தே காரணமென அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மடுப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் 58 நாட்களின் பின்னர் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசியல் விபத்தாக இருந்தாலும் கூட விபத்தினால் நல்ல காரியங்களும் இடம்பெற்றுள்ளன. அதன்படி தற்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இந்த அரசியல் விபத்து எனது அமைச்சுக்கும் நல்ல பக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. எனக்கும் கடந்த காலங்களை விட அதிகமான பொறுப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொள்வோம் – என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் சிங்கப்பூர் பயணமானார்.

இம்மாதம் 25ஆம் திகதி சிங்கப்பூர் மரினா பே சாண்ட்ஸ் கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், ஆசிய பசுபிக் ஆசிய வலயத்தின் 40 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அந்த நாடுகளின் சுற்றாடல் துறை அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இந்த இரண்டுநாள் உத்தியோகபூர்வ பயணத்தில் சிங்கப்பூர் ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் சந்தித்து கலந்துரையாட உள்ளார். (ஐ)

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குமாறு வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்தில் '1000 ரூபா இயக்கத்தின்' அழைப்பையேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக திகழும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு ஏன் ஆயிரம்ரூபாவை வழங்க முடியாது என கேள்வி எழுப்பியுள்ள பொகவந்தலாவ பகுதியை சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள், முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பினர்.

சுமார் 1000றக்கும் மேற்பட்ட பொகவந்தலாவ கெம்பியன், லின்போர்ட், லொய்னோன், நோர்கோ, பெற்றசோ, டெவன் போட், பிரிட்லேனட், ஆல்டி, கொட்டியாகலை, மோரா, செல்வகந்தை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்திலிருந்து எதிர்ப்பு வாசகங்களை எழுதிய சுலோகங்களையும் ஏந்தியவாறு பொகவந்தலாவ நகரம் வரை ஊர்வலமாக சென்றனர்.

அங்கு ஹற்றன் – பொகவந்தலாவ பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர். இதனால் அவ்வழியான போக்குவரத்து சுமார் 2 மணித்தியாலயங்கள் தடைப்பட்டன.

தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி சுகபோக வாழ்க்கையை நடத்தும் கம்பனிகாரர்கள் இன்றைய வாழ்வாதாரத்தினை நினைவில் வைத்துக் கொண்டு

அடுத்த கட்ட பேச்சை இறுதி பேச்சாக முன்னிறுத்தி ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும் என அழுத்தமான கோரிக்கையையும் முன்வைத்தனர். (ஐ)

## பிரிகேடியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மினிஸ்டர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை, வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என, பிரிட்டன் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் அலுவலகத்திடம் இலங்கை தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தல்பஹேவ, இது தொடர்பாகத் தெரிவித்தவை வருமாறு:

பிரிகேடியர் பெர்னான்டோ அப்போது இராஜதந்திரக் கடவுச் சீட்டை வைத்திருந்தார். எனவே அவருக்கு இராஜந்திர விலக்குரிமையும், சிறப்புரிமைகளும் இருந்தன.

பிரிகேடியர் பிரியங்க வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என, பிரிட்டன் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் அலுவலகத்திடம் தெரிவித்துள்ளோம்.

இந்த வழக்கு கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் கொழும்பு அரசு, பிரிட்டன் வெளிவிவகார அலுவலகத்திடம் எதிர்ப்பை வெளியிட்டது.

இது தொடர்பாக, அளிக்கப்பட்ட சமர்ப்பணத்தில், பிரிகேடியர் பிரியங்க பிரிட்டனை வதிவிடமாகக் கொண்டவரில்லை. இராஜதந்திர தலைவராகப் பிரிட்டனுக்குக் கடமைப் பயணம் மேற்கொண்டிருந்தார். எனவே அவருக்கு விலக்குரிமையும், முன்னுரிமைகளும் இருந்தன.

எமது இந்த நிலைப்பாட்டை அவர்களுக்குக் கூறியிருக்கிறோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்ற பதிலுக்காகக் காத்திருக்கிறோம். வழக்கு விசாரிக்கப்பட முன்னரே எமது எதிர்ப்பை சமர்ப்பித்திருந்தோம். ஆனாலும், பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் வெளிவிவகார அலுவலகத்துக்கும், நீதிமன்றத்துக்கும் இடையில் உள்ளகக் கலந்துரையாடல் நடந்ததா என்று எமக்குத் தெரியாது. ஆனால் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி விட்டோம் – என்றார். (ஐ)

## ஐ.நா. தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் அனுமதிக்கமாட்டோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில், புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படவேண்டும் என்பதையும் உள்ளடக்கவேண்டும் என்று தமிழர் தரப்புக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. தீர்மானத்தை சமர்ப்பிக்கும் என்று நம்பப்படும் கனடா, ஜேர்மனி, பிரிட்டன், மசிடோனியா ஆகிய நாடுகளுடன் இது தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தப் பின்னணியில் சம்பந்தன் – சுமந்திரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ரணில் அரச தரப்பினரும் இருப்பார்கள். உள்நாட்டில் நிறைவேற்ற முடியாதவற்றை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நிறைவேற்ற இவர்கள் முயல்கின்றார்கள்.

இதை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டோம். நாமும் நாட்டு மக்களைத் திரட்டிப் பதில் நடவடிக்கையில் இறங்குவோம்.

நாட்டின் பெரும்பாலான வளங்களைச் சர்வதேசசமூகத்துக்குத் தாரைவார்த்துக் கொடுத்த ரணில் அரசு, தற்போது நாட்டையும் துண்டு துண்டாகப் பிளவுபடுத்த முயல்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரோதரவுடன் இந்த மோசமான கருமங்களில் ரணில் அரசு ஈடுபடுகின்றது.

புலத்தில் இருக்கும் புலிப் பயங்கரவாதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நேரடித் தொடர்புகளையும், ரணில் அரச தரப்பினருடன் மறைமுகத் தொடர்புகளையும் வைத்திருக்கின்றனர். இவர்களின் நோக்கங்கள் நிறைவேற நாமும் நாட்டு மக்களும் அனுமதிக்கமாட்டோம் – என்றார். (ஐ)

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலை வகித்தவருமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே காணப்படுகின்றார். அரசின் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் இன்று கூட்டமைப்பினர் வசமே காணப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு முழுமையான பொறுப்புக்களையும் கூட்டமைப்பினரே ஏற்கவேண்டும். தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஜனநாயகம் என்ற சொற்பதத்தை தவறான முறையில் பயன்படுத்திக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒருதலைப்பட்சமாகச் செயற்பட்டதன் விளைவே முரண்பாட்டுக்குக் காரணம் – என்றார். (ஐ)

# மடுப் பிரதேச செயலகம் முன் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!



தேவைகளை நிறைவேற்றுமாறு கோரி



மடுப் பிரதேச செயலம் முன்பாக அப்பகுதி மக்களால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மடுப் பிரதேச செயலகத்தின் நுழைவாயிலை மூடி, அப்பகுதியின் பிரதேச, கிராமிய அமைப்புக்கள் நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன.

மடுப் பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில், மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் அனுசரணையில் இந்த அமைதி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மடுப் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள 76 கிராமங்களைக் கொண்ட 25 கிராம மட்ட அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றன.

குறிப்பாக மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வீதிகள் செப்பனிடப்படாமை, வீதி மின் விளக்குகள் பொருத்தாமை, குடிதண்ணீர் வசதிகள் இன்மை, உரிய போக்குவரத்துச் சேவைகள் இல்லாமை, மருத்துவ சேவைகள் இல்லாமை, கசிப்பு உற்பத்தியை உடன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வளங்கள் சுரண்டப்படுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து பிரதேசமக்கள்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

இந்நிலையில், மடுப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவிருந்த வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வுக்கு அமைச்சர் மனோ கணேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வருகை தந்தபோது நுழைவு வாயிலில் மறித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்ததோடு கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்தனர்.

மக்களின் பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டு அறிந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன், இது தொடர்பாக தான் உடனடியாக கவனம் செலுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

## சரத் என் சில்வாவுக்கு அழைப்பாணை



நீதிமன்றத்தை அவமதித்தகுற்றச்சாட்டு தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகக் கூறி முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராகப் பேராசிரியர்களான சந்ரகுப்த தேநுவர, ஹேவா வடுகே சிறில், பிராந்த குணவர்தன ஆகியோரால் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு நேற்று உயர்நீதிமன்ற நீதிபதிகளான விஜித் மலல்கொட, முர்டு பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அந்த வழக்கின் பிரதிவாதியான முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் சில்வா தமது கட்சிக்காரர் இந்த வழக்கு விசாரணைக்குத் தயார் என தெரிவித்தார்.

எனினும் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக சட்ட மா அதிபரின் ஒத்துழைப்பு தேவை என நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதன்படி அந்த மனு மீண்டும் எதிர்வரும் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினம் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அழைப்பாணை விடுக்கப்பட்டது. (ஐ)

## மன்னார் புதைகுழி எலும்புகள் இன்று காலை அமெரிக்காவுக்கு

கொழும்பு, ஜன. 24

மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள், காபன் பரிசோதனைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படவுள்ளன.

எலும்புக்கூடுகளின் மாதிரிகள் இன்று காலை பொலிஸ் பாதுகாப்புடன், கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட இருப்பதாக அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்கு அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் நீதிவான் மற்றும் விசாரணைக்குழு அதிகாரிகள் இடையில் இடம்பெற்றது. இந்நிலையில் இன்று காலை மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மன்னார் நீதிமன்றத்தில் இருந்து கொழும்பு விமான நிலையத்துக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படவுள்ளன. விமான நிலையத்தில் இருந்து அமெரிக்காவின் புளோரிடாவுக்கு காபன் பரிசோதனைக்காக இவை அனுப்பிவைக்கப்படும் – என்றார்.



இதுவரை இந்த அகழ்வுப் பணிகளின் போது 300 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் 294 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையவை என அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போதை ஒழிப்பை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று ஊர்வலம்



வவுனியா, ஜன. 24

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்திக் கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஊர்வலம் நேற்றுப் புதன்கிழமை பாடசாலையின் அதிபர் ரம்சீன் தலைமையில் இடம்பெற்றது.

அதன்படி, போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்துரைகளைத் தொடர்ந்து முஸ்லிம் மகாவித்தியாலய முன்றிலிலிருந்து குருமண்காடு சந்திவரை சென்ற ஊர்வலம் மீண்டும் அங்கிருந்து பாடசாலையை வந்தடைந்தது.

இதன்போது 'போதை நாட்டுக்கு கேடு', 'அதை ஒழிக்க ஒன்றிணைவோம்', 'எதிர்காலச் சந்ததியை வளர்க்கப் போதையை தடைசெய்', 'போதை அது சாவின் பாதை' போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியும் ஊர்வலத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## மாவட்டத் தலைவர்களை நியமித்தார் மைத்திரிபால

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய மாவட்டத் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்தில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு மாவட்டத்துக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக திலங்க சுமதிபாலவும், கம்பஹா மாவட்டத்துக்கு லசந்த அழகியவண்ணவும், களுத்துறை மாவட்டத்துக்கு மஹிந்த சமரசிங்கவும், காலி மாவட்டத்துக்கு சான் விஜயலால் டி சில்வாவும், கண்டி மாவட்டத்துக்கு எஸ்.பி.திஸாநாயக்கவும், கேகாலை மாவட்டத்துக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டியவும்,

மாத்தறை மாவட்டத்துக்கு விஜயதானாயக்கவும், அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு மஹிந்த அமரவீரவும், குருநாகல் மாவட்டத்துக்கு தயாசிறி ஜயசேகரவும், பதுளை மாவட்டத்துக்கு நிமால் சிறிபால டி சில்வாவும், அனுராதபுரம் மாவட்டத்துக்கு துமிந்த திஸாநாயக்கவும், அம்பாறை மாவட்டத்துக்கு சிறியானி விஜேவிக்ரமவும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அங்கஜன் இராமநாதனும், மாத்தளை மாவட்டத்துக்கு லக்ஷ்மன் வசந்த பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## தனியாக கழன்று ஓடிய பெட்டிகள்; விபத்தில் இருந்து தப்பியது ரயில்!

கொழும்பு, ஜன. 24

வவுனியாவிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலின் இரண்டு பெட்டிகள் கழன்று தனியாக ஓடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

தவளமவுக்கும் ஸ்ராவஸ்திபுரவுக்கு இடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் பயணிகள் எவருக்கும் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என ரயில்வே கட்டுப்பாட்டு அறை அறிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.